<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

<u>அசல் வழக்கு எண். 55/2019</u>

**2025–ம் ஆண்டு ஜுலை மாதம் 23–ம் நாள் புதன் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சத்தியமூர்த்தி (எ) கணேசன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ரத்தினம் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :தழுதாழை | வயது | : 65/2025 |

<u>**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

(i) வ.சா.ஆ.8 ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளுக்கு நான் வழக்கு தொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய சொத்துக்களுக்கு மட்டும் தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வழக்கு சர்வே எண் நினைவில்லை. உங்களுடைய வழக்கில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள வ.சா.ஆ.8 ஆவணத்தில் தென்வடல் சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது, பொது சந்து என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல அது பொது சொத்து இல்லை என்றால் சரியல்ல. வ.சா.ஆ.8 ல் கண்டுள்ள அங்கம்மாள் என்பவரின் சர்வே எண்.241 சப்டிவிசன் தெரியாது. உங்கள் மனைக்கு மேற்கு புறம் 4 ம் பிரதிவாதி கீதாவின் சந்து உள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது பொய் என்றும், மனைக்கு மேற்குபுறமாக கீதாவின் சந்து உள்ளது என்றாலும், அதை நீங்கள் ஆக்கிரமித்து குளியலறை மற்றும் படிகட்டுகள் கட்டியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி கீதா இதே நீதிமன்றத்தில் மேற்படி குளியலறை மற்றும் படிகட்டுகளை இடித்து ஒப்புதல் பெற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீங்கள் தான் அனுபவம் செய்து வருகிறீர்கள் என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

(ii) நீங்கள் தான் ஆக்கிரமித்து செய்து வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி கீதா என்பவர் தான் வழக்கு சொத்தை அனுபவிதது வருகிறார் அதனால் தான் அவருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் தவறுதலாக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும், அது உங்களுக்கு பாத்தியமானது பொது சந்து என்று சொல்வதும் பொது சொத்து என்று குறிப்பிட்டு எந்த ஆவணமும் தாக்கல் செய்யபடவில்லை என்றாலும் சரியல்ல. ஆகவே உங்கள் வழக்கு தள்ளுபடி

செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ஆவணம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.